DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.18/2024**
**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | சலவைதொழில் |
| பெயர் | - | மாசாணி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மருதமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | டோபிகாலனி, வால்பாறை | வயது | - | 38/2025 |
| சாதி | - | | | | |

**<u>27-01-2025</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**
நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சலவைதொழில் செய்து வருகிறேன். அ.சா.1 பெருமாள் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 6, 7 மாதங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் மாலை 07.30 மணியளவில் வால்பாறை கல்லூரி அருகே உள்ள முக்ரோட்டில் சண்டை நடந்ததாக உதவி ஆய்வாளர் படம் வரைந்துகொண்டிருந்ததார்கள் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் நடுமலையை சேர்ந்த விக்னேஷ் என்பவர் கையொப்பம் செய்தார். **(பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வால்பாறை சார்வு ஆய்வாளர் கேட்டுக்கொண்தற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். படம் வரைந்து கையொப்பம் கேட்டார்கள் கையொப்பம் செய்தேன்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.18/2024**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | பஜாஜ் பைனான்சில் வேலை |
| பெயர் | - | சிவக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சத்தியராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | சோலையார் டேம் | வயது | - | 27/2025 |
| சாதி | - | | | | |

**27-01-2025**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1, 2 ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 பெருமாள் என்பவரை தெரியும். சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பாக தேதி மாதம் நினைவில் இல்லை. ஒருநாள் இரவு 09.00 மணியளவில் நான் வால்பாறை கல்லூரி முன்பு உள்ள பேருந்து நிறுத்ததில் வீட்டிற்கு செல்வதற்காக நின்றுகொண்டிருந்தபோது அப்போது பேருந்து அந்த வழியாக வந்தது. பேருந்து ஓட்டுனர் பெருமாள் ஆரன் அடித்தார் அப்போது எதிரிகள் அங்கு நின்றுகொண்டு விலகவில்லை. பேருந்து ஓட்டுனர் இரண்டு மூன்றுமுறை ஆரன் அடித்தும் எதிரிகள் அங்கிருந்து விலகவில்லை. எதிரிகள் குடிபோதையில் இருந்தார்கள். பேருந்து ஓட்டுனர் இறங்கி வந்து எதிரிகளிடம் கேட்டபோது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு அடிதடி ஏற்பட்டது. அ.சா.1 கையை ஓங்கினார். எதிரிகள் அவரை தாக்கினார்கள். அ.சா.1-க்கு இடது பக்க கையில் அடிபட்டது. சம்பவயிடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள். பின்னர் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். பேருந்து நடத்துனர் அங்கிருந்தார். பின்னர் அ.சா.1 புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.